# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 உசிலம்பட்டி.
முன்னிலை: திரு.கே.எஸ்.ராஜேஷ் குமார்., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2 உசிலம்பட்டி.
2020 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்கிழமை
சி.ஆர்.எம்.பி.எண்.1808/2020

ராமர்
த.பெ.அர்ஜீனன்

..... மனுதாரர்/எதிரி

//எதிரிடை//

அரசுக்காக சார்பு ஆய்வாளர்
செக்கானூரணி காவல் நிலையம்
குற்ற எண்.289/2019
பிரிவுகள் 379, 411 IPC

...... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

மனுதாரர்/எதிரி குவிமுச பிரிவு 437-ன் கீழ் பிணை கோரி மனு தாக்கல் செய்து இன்று என் முன்பாக விசாரணைக்காக வந்தபோது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.C.பாஸ்கர் அவர்கள் முன்னிலையாகியும் குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை - II அவர்கள் முன்னிலையாகியும் இந்நீதிமன்றம் வழங்கிவிடும்.

## உத்தரவு

1.கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரி கடந்த 02/12/2019 முதல் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறைச்சாலையில் இருந்து வருகிறார் என்றும் எதிரியை பிணையில் விட வேண்டும் என்றும் இவ்வழக்கில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இறுதியாக இம்மனு விசாரணைக்கு வந்தபோது எதிரி தரப்பில் எதிரியை பிணையில் விட வேண்டும் என்றும் இம்மனுவில் வாதிடப்பட்டது.

2.அரசு தரப்பில் எதிரியை் பிணையில் விட்டால் வெளி மாநிலத்திற்கோ அல்லது மாவட்டத்திற்கோ தப்பி சென்று தலைமறைவாக இருக்க கூடும் என்பதாலும் எதிரி வெளியில் இருந்தால் இதே போன்ற குற்ற செயல்களில் மீண்டும் ஈடுபடுவார் என்பதாலும் எதிரி வெளியில் இருந்தால் சாட்சிகளை களைக்க கூடும் என்பதாலும் எதிரி மீது கீழ்கண்ட காவல் நிலையங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும் .வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாலும் எதிரியை ஜாமினில் விட கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1.வாடிப்பட்டி காவல் நிலைய குற்ற எண்கள்: | 1 | 285/19, பிரிவு 379 இதச மற்றும் |
| | 2. | 297/19, பிரிவு 379 இதச |
| 2.விருதுநகர் கிழக்கு காவல் நிலைய குற்ற எண் : | | 499/19, பிரிவு 379 இதச |
| 3.காரியாபட்டி காவல் நிலைய குற்ற எண் : | | 221/19 பிரிவு 379 இதச |

K S. Rajesh Kumar
02/06/2020

Scanned with CamScanner

4.தென்காசி காவல் நிலைய குற்ற எண்கள்: 1. 405/19, பிரிவு 379, 411, 412, 109 இதச
2. 558/19, பிரிவு 379, 411, 412, 109 இதச

5.தூத்துக்குடி மாவட்ட புதியம்புத்தூர் காவல் நிலைய குற்ற எண்: 143/19 பிரிவுகள் 147, 148, 448, 302, 201 இதச.

3.இந்நிலையில் குற்றத்தின் தன்மை மற்றும் வழக்கின் தன்மை மற்றும் எதிரி தரப்பில் கூறப்பட்ட கூற்று ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இவ்வழக்கில் மனுதாரர்/எதிரி 183 நாட்களாக நீதிமன்ற காவலில் உள்ளதை கருத்தில் கொண்டும் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட காரணத்தினாலும் கோவிட் -19 என்ற வைரஸ் தொற்று நோய் கிருமியின் காரணத்தால் இடைக்கால பிணையத்தில் எதிரியை ரூ.10,000/-க்கு அவரது சொந்த பிணையில் விடுவித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேலும் எதிரியை் நீதிமன்றம் செயல்பட ஆரம்பித்த ஒரு வார காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களுக்காக தலா ரூ.10,000/-க்கு ஜாமீன் சான்றுடன் பிணைமுறி அளிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேலும் எதிரி நாள்தோறும் காலை 10.00 மணிக்கு தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் தாலுகா காவல் நிலையத்தில் மறு உத்தரவு வரும் வரை ஆஜராகி கையெழுதிட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

என்னால் 2020 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 02 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

N S Rojer Kumar 02/06/2020
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**உசிலம்பட்டி.**

**நகல்:**

1.சிறைக்கண்காணிப்பாளர்,
மத்திய சிறை,
மதுரை.

2.மனுதாரரின் வழக்கறிஞர்

3.சார்பு ஆய்வாளர்,
செக்கானூரணி காவல் நிலையம்,
செக்கானூரணி.

Scanned with CamScanner